இந்திய உச்சநீதிமன்றம்

2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 09 ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் இந்திரா பானர்ஜி
மற்றும்

மாண்புமிகு நீதியரசர் ஜெ.கே.மகேஸ்வரி

குற்றவியல் மேல்முறையீடு எண்.388/2022

குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973

தேவதாசன்

/ எதிராக /

2ஆம் வகுப்பு நிர்வாக நடுவர்
இராமநாதபுரம் மற்றும் பலர்

பிரிவுகள் 122(1)(ஆ), 111, 117 மற்றும் 110. -- அமைதி காப்பதற்கும் நன்னடத்தைக்குமான ஜாமீன் -- மீறப்பட்டதால் சிறை தண்டனை விதிக்கப்பட்டது -- மேல்முறையீட்டாளரால் கு.வி.மு.ச.பிரிவுகள் 110 உடன் இணைந்த 117 -ன் கீழ் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட பின்னர் நிபந்தனையை மீறி குற்ற வழக்கில் சம்பந்தப்பட்டதால் வழக்கு பதிவு செய்யப்பட்டது -- மேல்முறையீட்டாளர் அமைதி பேணுவதற்கு எழுதிக் கொடுத்த

பத்திரத்தை மீறியதால் கு.வி.மு.ச.122(1)(ஆ)பிரிவின் கீழ் நிர்வாக நடுவரால் சிறைதண்டனை விதிக்கப்பட்டது சரியானது என உயர்நீதிமன்றம் முடிவு செய்தது -- நிர்வாக நடுவர் மற்றும் உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளில் தலையீடு செய்ய வேண்டியதில்லை -- பிரிவுகள் 111 மற்றும் 117-ன்படி அமைதி காப்பதற்கு பத்திரம் பெற்றதும், அது மீறப்பட்டதால் பிரிவு 122-ன் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது அனுமதிக்கத்தக்கது -- தனிமனித சுதந்திரம் சட்டத்தால் இயற்றப்பட்ட வழிமுறைகள் பின்பற்றப்படுவது - வகுக்கப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டு, மேல்முறையீட்டாளர்க்கு வாய்ப்பு வழங்கப்பட்டு நிர்வாக நடுவரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது -- அந்த உத்தரவு உயர்நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்தியாயம் VIII -- நோக்கம் மற்றும் எல்லை - அத்தியாயம் VIII -ல் நிர்வாக நடுவருக்கு குடிமகன்களிடம் அமைதி பேணுவதற்கும், நன்னடத்தைக்குமான பத்திரம் பெற அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது -- மேற்படி அத்தியாயத்தில் சம்பந்த துறையினர்களுக்கு வட்டார எல்லையில் குடிமகன்கள் அமைதி காப்பதை மீறினால் நடவடிக்கை சட்டமியற்றி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது -- சம்பந்த துறையால் வகுக்கப்பட்ட நடைமுறைகளை பின்பற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

கு.வி.மு.ச. அத்தியாயம் VIII-ல் நிர்வாகத் துறை நடுவருக்கு அமைதி காப்பதற்கும்,

குடிமகன்களின் நன்னடத்தைக்குமான பத்திரம் பெற அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கு.வி.மு.ச.107 பிரிவின்படி யாராவது ஒருவர் அநேகமாக அமைதி குலைவை உண்டாக்கவோ, அல்லது பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கவோ அல்லது சட்டத்தை மீறி ஏதாவதொரு செயலால் அநேகமாக அமைதிக் குறைவையோ, பொது அமைதிக்குப் பங்கத்தையோ விளைவிக்கக் கூடும் என்பதாக தகவல் கிடைத்து, நடவடிக்கை எடுப்பதற்கு போதுமான காரணம் இருப்பதாக நிர்வாகத்துறை நடுவர் கருதும் போது அமைதி பேணுவதற்கான பத்திரத்தை எழுதித் தர வேண்டும் என உத்தரவிடுவதற்கு அதிகாரம் உள்ளது. கு.வி.மு.ச.108 பிரிவின்படி ஆட்சிக்கு துரோகமாக கிளர்ச்சி செய்யும் விசயங்களை பரப்புகின்றவர்களிடமிருந்து நன்னடத்தைக்கான பத்திரம் பெற அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதேபோல் கு.வி.மு.ச.109 மற்றும் 110 பிரிவுகளின்படி நிர்வாகத்துறை நடுவருக்கு சந்தேகிக்கப்படும் நபர்களிடமிருந்தும், வழக்கமான குற்றவாளிகளிடமிருந்தும் நன்னடத்தைக்கான பத்திரம் பெற உரிமை அளிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் கு.வி.மு.ச.111 மற்றும் 117 பிரிவுகளின்கீழ் ஜாமீன் பத்திரம் தருமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அது மீறப்படும்போது கு.வி.மு.ச.122 பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த அத்தியாயம் சட்டமியற்றல் துறையால் கொண்டு வரப்பட்டதற்கான காரணம் யாதெனில் பொது அமைதிக்கு பங்கம் விளைவிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக துறையினர்களுக்கு அதிகாரம்

அளிக்கப்பட்டுள்ளது. வகுக்கப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி சம்பந்தப்பட்ட துறையினரால் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுவாக நிர்வாக அலுவலர்கள் வகுக்கப்பட்ட நடைமுறைகளை பின்பற்றுவதில்லை என்றும் மற்றும் இந்திய அரசியலமைப்பின் ஆர்ட்டிகள் 21-ன் படி குடிமகனின் தனி மனித சுதந்திரம் சம்பந்தமாக கோபாலநாச்சியாரின் தீர்ப்புரைகளையும் தற்போதுள்ள வழக்கின் பொருண்மைகளின்படி கு.வி.மு.ச. அத்தியாயம் VIII -ன் கீழ் வகுக்கப்பட்ட நடைமுறைகள் எப்படி, எந்த வகையில் பின்பற்றப்படவில்லை என்பதற்கு பதிவு எதுவும் இல்லை. சட்டத்தில் நிறுவப்பட்ட நடைமுறையை பின்பற்றுவதன் மூலம் குடிமக்களின் தனிப்பட்ட சுதந்திரத்தை கையாள முடியும். இந்த வழக்கின்படி மேல்முறையீட்டாளர் 24.2.2021 அன்று கு.வி.மு.ச.110 மற்றும் உடன் இணைந்த 117 -ன் கீழ் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டு, குற்ற வழக்கில் ஈடுபட்டதன் காரணமாக நிபந்தனை மீறப்பட்டுள்ளது. இந்த வழக்கில் மேல்முறையீட்டாளரால் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டது கேள்விக்கு உட்படுத்தப்படவில்லை. பின்னிட்டு நிபந்தனைகள் மீறப்பட்டதால் 13.05.2021 தேதியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு காவலுக்கு அனுப்பப்பட்டார். முதல் எதிர்மனுதாரரால் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு, மேல்முறையீட்டாளருக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவை உயர்நீதிமன்றம் சரியாக உறுதி செய்துள்ளது. உயர்நீதிமன்றத்தாலும்

முதல் எதிர்மனுதாரராலும் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளில் தலையீடு தேவையற்றது.

அல்டானிஷ் (எதிராக) டெல்லி என்.சி.டி அரசு 2018 எஸ்.சி.சி ஆன்லைன் டெல்லி 12207, தேவி (எதிராக) நிர்வாக நடுவர் (மெட்ராஸ் உயர்நீதிமன்றம்) 2020 எஸ்.சி.சி ஆன்லைன் எம்எடி.2706, பிரேம்சந்த் (எதிராக) யூனியன் ஆப் இந்தியா (1981) 1 எஸ்.சி.ஆர்,1262, கோபாலநாச்சாரி (எதிராக) கேரள அரசு 1980 (Supp) எஸ்.சி.சி.649, 1981 எஸ்.சி.ஆர்.1271.

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

(1981) (1) எஸ்.சி.ஆர்,1262 - பத்தி - 4

(1981) எஸ்.சி.ஆர்,1271 - பத்தி - 4

குற்றவியல் மேல்முறையீடு அதிகாரம் --

குற்றவியல் மேல்முறையீடு எண்.388/2022

மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வில் குற்றவியல் சீராய்வு வழக்கு (எம்.டி) நெ.379/2021-ல்22.07.2021தேதியிட்ட பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் தீர்ப்புரையின் பேரில்.

வழக்குரைஞர்கள்

திரு எ.வேலன், திருமதி நவபிரித் கார், நிரஞ்சன் எஸ்.குமார், ருத்திரகாஷ் குப்தா, ஏ.லட்சுமிநாராயணன் மேல்முறையீட்டாளருக்காக.

திரு ஜோசப் அரிஸ்டாட்டில், திருமதி பிரித்தி சிங், திருமதி ரிபுல் ஸ்வாதி சிங், சஞ்சீவ் குமார் மகரா - எதிர்மனுதாரர்களுக்காக.

மாண்புமிகு நீதியரசர் திரு ஜெ.கே.மகேஸ்வரி அவர்களால் தீர்ப்புரை பகரப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. இந்த மேல்முறையீடானது முதல் எதிர்மனுதாரரால் எம்.சி.நெ.95/2021 (3வது எதிரி)-ல் 13.05.2021 தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வு-ஆல் குற்றவியல் சீராய்வு வழக்கு (எம்.டி) எண்.379/2021 மற்றும் குற்றவியல் சீராய்வு மனு (எம்.டி) எண்.3829/2021-ல் 22.07.2021 தேதியில் உறுதி செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவால் மனக்குறையுற்று அதிருப்தியடைந்ததால் 3வது எதிரி தற்போதைய மேல்முறையீட்டினை தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கின் பொருண்மைகள் சுருக்கமாக என்னவென்றால்.

முதல் எதிர்மனுதாரர் மற்றும் உயர்நீதிமன்றத்தால் மேல்முறையீட்டாளர் பிணைய நிபந்தனைகளை மீறி விட்டதாக முடிவு செய்து குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் (சுருக்கமாக கு.வி.மு.ச.)பிரிவு122(1)(ஆ) பிரிவின் கீழான அதிகாரத்தை பயன்படுத்தி தண்டனை வழங்கப்பட்டது. மேல்முறையீட்டாளர்க்கு உரிய வாய்ப்பு அளித்த பிறகு கு.வி.மு.ச.பிரிவு117 உடன் இணைந்த 110(2) பிரிவின் படி மேல்முறையீட்டாளர் குற்ற நடவடிக்கைகளில் கூறி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, ஓர் ஆண்டு காலத்திற்கு நல்ல நடத்தையுடன் அமைதி காக்க வேண்டும் என கூறி பிணைப்பத்திரம் ரு.50,000க்கு எழுதிக் கொடுக்க வேண்டும் என்றும், அமைதி காக்கவில்லை என்றால் அரசாங்கத்திற்கு தண்ட

தொகை செலுத்த வேண்டும் அல்லது கு.வி.மு.ச.பிரிவு122(1)(ஆ)பிரிவின் கீழான நடவடிக்கையை எதிர்கொள்ள வேண்டும் என முதல் எதிர்மனுதாரரால் 24.02.2021-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பிணைப்பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட சமயத்தில் கொலை குற்றத்தில் ஈடுபட்டதாக கூறி உச்சிபுளி காவல் நிலைய குற்ற எண்.149/2021 இ.த.ச.147, 148, 342, 302 உ/இ. 109,120(ஆ) பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. முதல் எதிர்மனுதாரரால் 13.05.2021தேதியில் பிணைய நிபந்தனையை மீறி விட்டதாக முடிவு செய்யப்பட்டு, கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, காவலுக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது. மேற்கண்ட உத்தரவை உயர்நீதிமன்றம் உறுதி செய்ததால், இரு உத்தரவுகளையும் எதிர்த்து இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் ஸ்ரீ ஏ.லட்சுமிநாராயணன் தனது வாதுரையில் நிர்வாக துரையினர்களால் வழக்கமாக உத்தரவுகள் பிறப்பிக்கும் போது வகுக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றுவதில்லை மற்றும் நியாயமான வாய்ப்பை அளிப்பதில்லை என கூறினார். டெல்லி உயர்நீதிமன்றம் அல்டானிஷ் / எதிராக / டெல்லி என்.சி.டி அரசு 2018 எஸ்.சி.சி ஆன்லைன் டெல்லி 12207 என்ற வழக்கில் வழிகாட்டுதல்கள் கொடுக்கப்பட்டு இத்தகைய அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தால் தேவி / எதிராக / நிர்வாக நடுவர் (மெட்ராஸ் உயர்நீதிமன்றம்) 2020எஸ்.சி.சி ஆன்லைன் மெட்ராஸ் 2706 என்ற வழக்கில் முந்தைய தீர்ப்புரையில் இருந்து மாறுபட்ட கருத்து எடுக்கப்பட்டு

மாண்புமிகு தலைமை நீதியரசரால் இதே வினாக்களுக்கு பதில் அளிக்க இருவர் ஆயத்தை நியமிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. காவல்துறை அதிகாரிகள் வகுக்கப்பட்ட முறையில் செயல்பட வேண்டும் என்பது பற்றியும், ஆனால் தனிமனித சுதந்திரத்தை கருணையின் அடிப்படையில் கொண்டு செல்ல முடியாது என்றும் (1981) 1 எஸ்.சி.சி, 639 சந்த் (எதிராக) யூனியன் ஆப் இந்தியா என்ற வழக்கின் தீர்ப்புரையை கற்றறிந்த வழக்குரைஞர் மேற்கோள் காட்டினார். மேலும் கோபாலநாசாரி எதிராக கேரள அரசு 1980 (கூடுதல்) எஸ்.சி.சி.649 என்ற வழக்கின் தீர்ப்புரையை சார்ந்து நின்று இந்திய அரசியல் அமைப்பு சட்டம் பிரிவுக் கூறு (Article) 21-ன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். மேற்கண்ட வாதங்களை சமர்பித்து உரிய விசாரணை நடத்தாமலும், நியாயமான வாய்ப்பை வழங்காமலும் பிணைய பத்திரத்தில் நிபந்தனைகளை விதிப்பது முற்றிலும் நியாயமற்றது மற்றும் மேல்முறையீட்டாளரை குற்றவாளியாக கருத முடியாது மற்றும் அநியாயமாக காவலுக்கு அனுப்பப்படலாம்.

5. மறுபுறம் எதிர்மனுதாரர்களுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் டாக்டர் ஜோசப் அரிஸ்டாட்டில் வாதுரையில் மேல்முறையீட்டாளர் மீது எட்டு குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றும், அதனால் கு.வி.மு.ச.117 பிரிவின் கீழான அதிகாரத்தின் படி பாதுகாப்பிற்காக நன்னடத்தைக்காக பத்திரம் பெறப்பட்டது என்றும், மேற்படி பத்திர நிபந்தனையை மீறியதால் கு.வி.மு.ச.122(1)(ஆ) பிரிவின் கீழ்

வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி சரியான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என கூறினார். கு.வி.மு.ச. அத்தியாயம் VIII -ல் நிர்வாக நடுவர் சந்தேகப்படும் நபர்களிடம் அமைதி காப்பதற்கும் மற்றும் நன்னடத்தையை கடைபிடிக்கவும் பிணைப்பத்திரம் பெற அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது என வாதுரை செய்தார். பிறகு மேல்முறையீட்டாளர் கொலை குற்றத்தில் சம்பந்தப்பட்டதால், 07.05.2021 தேதி ஆஜராக வேண்டும் என காரணம் கேட்டும் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் வரை மேற்படி செயலுக்கு பொறுப்பாக்க முடியாது என்றும் பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டதும், கொலை குற்றத்துடன் சம்பந்தப்பட்டுள்ளதையும் மறுக்கவில்லை. மேல்முறையீட்டாளர் 24.02.2021தேதி எழுதிக் கொடுத்த பத்திரத்தில் உள்ள நிபந்தனைகளை மீறி உள்ளார் என நிரூபிக்கப்பட்டதால் மேல்முறையீட்டாளர்க்கு தகுந்த வாய்ப்பு கொடுத்த பிறகு தகுதி வாய்ந்த ஆணையத்தால் 13.05.2021 தேதியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எதிர்மனுதாரர்களால் வகுக்கப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டதால் அரசியலமைப்பு ஆர்டிகள் 136-ன் கீழ் உயர்நீதிமன்றம் குறுக்கீடு செய்யவில்லை.

6. சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்கள் கேட்கப்பட்டது மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மேல்முறையீட்டாளர் மீது 2012 முதல் முதல் 2021 ஜனவரி வரை காயம் விளைவித்தல், கொடுங்காயம் விளைவித்தல், திருட்டு மற்றும் படைக்கல சட்டம் உட்பட எட்டு குற்ற

வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2வது எதிர்மனுதாரரிடம் அறிக்கை பெற்ற பிறகு, மேல்முறையீட்டாளர்க்கு காரணம் கேட்டு அறிவிப்பு கொடுத்த பிறகு முதல் எதிர்மனுதாரரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் தொடர்ச்சியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளர் அந்த வட்டார பகுதியில் அமைதிக்கு பங்கம் ஏற்படுத்துகிறார் என அதிருப்தி அடைந்ததால் முதல்எதிர்மனுதாரர் கு.வி.மு.ச. 117பிரிவின் கீழ் ஜாமீன்தாரர் இல்லாமல் ரூ,50,000 த்திற்கு ஜாமீன் பத்திரம் எழுதித்தர வேண்டும் என்றும், ஒரு வருட காலம் கடைபிடிக்க வேண்டும் என்றும், தவறும்பட்சம் கு.வி.மு.ச. 122(1)(ஆ)பிரிவின் படி அத்தகைய கால அளவு முடியும் வரை சிறையில் அடைத்து வைக்கலாம் என்றும் அல்லது நிபந்தனைகள் மீறப்பட்டால் கு.வி.மு.ச. 122(1)(ஆ) பிரிவின் கீழ் நடவடிக்கை என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேல்முறையீட்டாளர் எழுதி கொடுத்த பத்திரத்தில் உள்ள தொடர்புடைய சாராம்சம் பின்வறுமாறு.

எம்.சி.நெ.95/2021

கு.வி.மு.ச.பிரிவு 117 உடன் இணைந்த 110 (இ)-ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு.

இந்த வழக்கு உச்சிப்புளி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில் இராமநாதபுரம், வட்டாட்சியர் மற்றும் 2ம் வகுப்பு நடுவரால் தொடங்கப்பட்டது. இநத் நபர் 24.02.2021 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு

ஆஜர்படுத்தப்பட்டார். இந்நீதிமன்றத்தால் விசாரணை நடத்தப்பட்டது மற்றும் காரணம் கேட்கும் அறிவிப்பில் உள்ள விதிகளின்படி அறிவிப்பு கொடுக்கப்பட்டு தேவதாசன், 28/21, த/பெ தெய்வேந்திரன், மரவெட்டிவலசை என்பவரிடம் விளக்கம் கேட்கப்பட்டு, விரிவான வாக்குமூலம் மற்றும் தரப்பினர்களின் வாதுரைகள் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அனைத்து பொருண்மைகள் மற்றும் விசாரணையில் பெறப்பட்ட தகவல் ஆகியவற்றின் மூலம் தேவதாசன் 28/21, த/பெ.தெய்வேந்திரன் என்பவர் அந்த வட்டாரத்தில் அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தக்கூடும் என முடிவு செய்யப்பட்டது மற்றும் கு.வி.மு.ச.பிரிவு 117-ன் படி ஜாமீன்தாரர்கள் இல்லாமல் ரூ,50,000/-க்கு பிணைப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும் மற்றும் ஒரு வருட காலத்திற்கு கடைபிடிக்க வேண்டும்.

இராமநாதபுரம், வட்டாட்சியர் மற்றும் 2-ஆம் வகுப்பு நிர்வாக நடுவர் அவர்களால் ஜாமீன்தாரர்கள் இல்லாமல் ரூ,50,000/-த்திற்கு 24.02.2021 தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு ஜாமீன்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தவறும் பட்சத்தில் கு.வி.மு.ச.பிரிவு 122(1)(ஆ) பிரிவின் படி நிபந்தனைகளை மீறினால் சிறையில் வைக்கப்படுதல் வேண்டும் என்றும், கு.வி.மு.ச.பிரிவு 122(1)(ஆ) பிரிவின் கீழ் பத்திரத்தின் கால அளவு முடியும் வரை சிறையில் வைக்க உத்தரவிடப்பட்டது

ஒம்.

2ஆம் வகுப்பு நடுவர் மற்றும் வட்டாட்சியர்,

இராமநாதபுரம்.

7. பத்திரம் எழுதிக் கொடுத்த பிறகு, இராமநாதபுரம் உச்சிப்புளி காவல் நிலையத்தில் குற்ற எண்.141/2021 இ.த.ச.147, 148, 342, 302 உ/இ. 120(பி) பிரிவுகளின் கீழான வழக்கில் மேல்முறையீட்டாளர் மற்ற எதிரிகளுடன் சேர்ந்து குற்றம் இழைத்ததாகக் கூறி 31.03.2021 தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது மற்றும் பத்திரத்தில் கூறப்பட்ட நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளரிடம் காரணம் கேட்கும் அறிவிப்பு கொடுக்கப்பட்டு முதல் எதிர்மனுதாரர் முன்பு 07.05.2021 தேதியில் ஆஜராக உத்தரவிடப்பட்டது. மேல்முறையீட்டாளர் விளக்கத்தை சமர்பித்தார் மற்றும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. முதல் எதிர்மனுதாரரால் போதிய வாய்ப்பு கொடுக்கப்பட்டு மேல்முறையீட்டாளர் பத்திரத்தின் நிபந்தனைகளை மீறியுள்ளதாகவும், கு.வி.மு.ச.பிரிவு 122(1)(ஆ)பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்கவர் என 13.05.2021 ஆம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டார். கு.வி.மு.ச. அத்தியாயம் VIII-ல் நிர்வாகத் துறை நடுவருக்கு அமைதி காப்பதற்கும், குடிமகன்களின் நன்னடத்தைக்குமான பத்திரம் பெற அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கு.வி.மு.ச.107 பிரிவின்படி யாராவது ஒருவர் அநேகமாக அமைதி குலைவை உண்டாக்கவோ, அல்லது பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கவோ அல்லது சட்டத்தை மீறி ஏதாவதொரு செயலால் அநேகமாக அமைதிக் குறைவையோ, பொது அமைதிக்குப் பங்கத்தையோ விளைவிக்கக் கூடும் என்பதாக தகவல் கிடைத்து,

நடவடிக்கை எடுப்பதற்கு போதுமான காரணம் இருப்பதாக நிர்வாகத்துறை நடுவர் கருதும் போது அமைதி பேணுவதற்கான பத்திரத்தை எழுதித் தர வேண்டும் என உத்தரவிடுவதற்கு அதிகாரம் உள்ளது. கு.வி.மு.ச.108 பிரிவின்படி ஆட்சிக்கு துரோகமாக கிளர்ச்சி செய்யும் விசயங்களை பரப்புகின்றவர்களிடமிருந்து நன்னடத்தைக்கான பத்திரம் பெற அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதேபோல் கு.வி.மு.ச.109 மற்றும் 110 பிரிவுகளின்படி நிர்வாகத்துறை நடுவருக்கு சந்தேகிக்கப்படும் நபர்களிடமிருந்தும், வழக்கமான குற்றவாளிகளிடமிருந்தும் நன்னடத்தைக்கான பத்திரம் பெற உரிமை அளிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் கு.வி.மு.ச.111 மற்றும் 117 பிரிவுகளின்கீழ் ஜாமீன் பத்திரம் தருமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அது மீறப்படும்போது கு.வி.மு.ச.122 பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த அத்தியாயம் சட்டமியற்றல் துறையால் கொண்டு வரப்பட்டதற்கான காரணம் யாதெனில் பொது அமைதிக்கு பங்கம் விளைவிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக துறையினர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. வகுக்கப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி சம்பந்தப்பட்ட துறையினரால் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

8. மேல்முறையீட்டாளருக்காக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் ஆல்டானிஷ் மற்றும் தேவி ஆகிய வழக்குகளில் டெல்லி உயர்நீதிமன்றம் மற்றும் மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளையும், பொதுவாக நிர்வாக

அலுவலர்கள் வகுக்கப்பட்ட நடைமுறைகளை பின்பற்றுவதில்லை என்றும் மற்றும் இந்திய அரசியலமைப்பின் ஆர்ட்டிகள் 21-ன் படி குடிமகனின் தனி மனித சுதந்திரம் சம்பந்தமாக கோபாலநாச்சியாரின் தீர்ப்புரைகளையும் மேற்கோள் காட்டினார். ஆனால் தற்போதுள்ள வழக்கின் பொருண்மைகளின்படி கு.வி.மு.ச. அத்தியாயம் VIII -ன் கீழ் வகுக்கப்பட்ட நடைமுறைகள் எப்படி, எந்த வகையில் பின்பற்றப்படவில்லை என்பதற்கு பதிவு எதுவும் இல்லை. சட்டத்தில் நிறுவப்பட்ட நடைமுறையை பின்பற்றுவதன் மூலம் குடிமக்களின் தனிப்பட்ட சுதந்திரத்தை கையாள முடியும். இந்த வழக்கின்படி மேல்முறையீட்டாளர் 24.2.2021 அன்று கு.வி.மு.ச.110 மற்றும் உடன் இணைந்த 117 -ன் கீழ் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டு, குற்ற வழக்கில் ஈடுபட்டதன் காரணமாக நிபந்தனை மீறப்பட்டுள்ளது. இந்த வழக்கில் மேல்முறையீட்டாளரால் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டது கேள்விக்கு உட்படுத்தப்படவில்லை. பின்னிட்டு நிபந்தனைகள் மீறப்பட்டதால் 13.05.2021 தேதியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு காவலுக்கு அனுப்பப்பட்டார். மேற்கண்ட விவாதத்தின்படி எங்களுடைய கருத்து யாதெனில் முதல்எதிர்மனுதாரரால் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு, மேல்முறையீட்டாளருக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவை உயர்நீதிமன்றம் சரியாக உறுதி செய்துள்ளது. எனவே மேல்முறையீட்டாளர் தரப்பு கற்றறிந்த வழக்குரைஞரின் வாதுரையை ஏற்க முடியாது.

9. மேலே கூறப்பட்ட விவாதத்தின் அடிப்படையில் உயர்நீதிமன்றத்தாலும் முதல்

எதிர்மனுதாரராலும் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளில் தலையீடு தேவையற்றது எனக் கருதுகிறோம். இந்த மேல்முறையீடு எந்த தகுதியும் இல்லாதது. எனவே இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி தன்னுடைய மொழியில் புரிந்து கொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தி கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."